செ.வெ.எண்: 401 நாள்: 01/07/2011

மாண்புமிகு தமிழக முதல்வர் அம்மா அவர்களின் அறிவுரையின்படி மாண்புமிகு தொழில்துறை அமைச்சர் திரு எஸ்.பி. வேலுமணி அவர்கள் இன்று (1.7.2011) தொழில்துறை, துறைத்தலைவர் அலுவலகங்கள் (HoDs) மற்றும் பொதுத்துறை நிறுவனங்களின் பணிகளை குறித்து தலைமைச்செயலக தொழில்துறை கூட்ட அரங்கத்தில் ஆய்வு செய்தார். அப்போது டிட்கோவின் தலைவர் மற்றும் மேலாண்மை இயக்குநர் திருமதி சூசன் மேத்யூ, இ.ஆ.ப., தொழில்துறை முதன்மை செயலாளர் டாக்டர் ந. சுந்தரதேவன், இ.ஆ.ப., சர்க்கரைத்துறை ஆணையர் திரு ராஜீவ் ரஞ்சன், இ.ஆ.ப., சிப்காட் தலைவர் மற்றும் மேலாண்மை இயக்குநர் திரு நிரஞ்சன் மார்டி, இ.ஆ.ப., தமிழ்நாடு உப்புக்கழக மேலாண்மை இயக்குநர் திரு டேவிதார் இ.ஆ.ப., சிறப்பு முயற்சிகள் துறை செயலாளர் திரு கே.இராஜாராமன், இ.ஆ.ப., தமிழ்நாடு செய்தித்தாள் நிறுவனத் தலைவர் திரு தா.கி.ராமச்சந்திரன், இ.ஆ.ப., தமிழ்நாடு கனிம நிறுவன தலைவர் மற்றும் மேலாண்மை இயக்குநர் திரு பெ.மு.பஷீர் அஹமது, இ.ஆ.ப., புவியியல் மற்றும் சுரங்கத்துறை ஆணையர் பொறுப்பு திரு அதுல் ஆனந்த், இ.ஆ.ப., தமிழ்நாடு தொழில் வெடிபொருள் நிறுவன மேலாண்மை இயக்குநர் திரு வா. சம்பத், இ.ஆ.ப., தொழில் வழிகாட்டுதல் மற்றும் ஏற்றமதி மேம்பாட்டு நிறுவன செயல் துணைத் தலைவர் திரு எம்.வேல்முருகன் மற்றும் தமிழ்நாடு தொழில் முதலிட்டுக் கழகம் மற்றும் தமிழ்நாடு சிமெண்ட் நிறுவன அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

சுந்தரதேவன்
1.7.2011
PS/Industries

1/1

வெளியீடு, இயக்குநர்,
செய்தி, மக்கள் தொடர்புத் துறை,
சென்னை-9